©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 268A] சென்னை, வியாழக்கிழமை, ஆகஸ்ட் 18, 2011
ஆவணி 1, திருவள்ளுவர் ஆண்டு — 2042

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**2011–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2011**

**2006-ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூக பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டத்தை நீக்கம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து இரண்டாம் ஆண்டில், தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம் 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) நீக்கச் சட்டம் என வழங்கப் பெறும்.

(2) இது, மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறித்துரைக்கக்கூடிய, அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

நீக்கம்.

தமிழ்நாடு சட்டம் 29/2006.

2. 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது.

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல நிதியத்தில் சேர்ந்துள்ள தொகைகளை மாற்றம் செய்தல்.

3. இச்சட்டம் தொடங்கிய தேதியன்று தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல நிதியத்தில் வரவு வைக்கப்பட்ட தொகையானது, அரசினால் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய பிற நிதியம் அல்லது கணக்குத் தலைப்புக்கு மாற்றம் செய்யப்படுதல் வேண்டும்.

## நோக்க–காரண விளக்கவுரை

2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/2006) இணைப்புப் பட்டியலிலேயே பயனாளிகள் பெறவேண்டிய உதவித் தொகையின் அளவானது குறித்துரைக்கப்பட்டுள்ளது. அவ்வாறான நிலையில், உதவித் தொகையின் அளவானது மாற்றம் செய்யப்படவேண்டும் எனும்போதெல்லாம் திருத்தமொன்று தேவையாகிறது; அதுவே நடைமுறையைச் சிக்கலானதாகவும் இடைஞ்சல் நிறைந்ததாகவும் ஆக்குகிறது. மேலும் மேற்சொன்ன 29/2006 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின் 7–ஆம் பிரிவின்படி, விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் நல வாரியமானது நலத்திட்டத்தினை நிர்வகிப்பதற்குப் பொறுப்பானதாகும். மேலும் அந்த வாரியமானது அந்தச் செயல் திட்டத்தின் மூலம் அதற்கு வழங்கப்படக்கூடிய அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துதலும், அத்தகைய அலுவல்களை ஆற்றுதலும் வேண்டும். ஆனால், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் நலத்திற்கான செயற்திட்டமானது வருவாய்த் துறை அலுவலர்களால் மட்டுமே செயல்படுத்தப்படுகிறது. எனவே நலத்திற்கான செயற்திட்டத்தைச் செயல்படுத்துவதில் வாரியத்தின் பங்கானது மிகவும் குறைவானதாக இருக்கிறது. மேற்சொன்ன சட்டத்தின் கீழ் வாரியத்தை அமைத்துருவாக்குவதும் மற்றும் அதன் அலுவல் சாரா உறுப்பினர்களை நியமிப்பதும் அரசுக்குக் கூடுதல் செலவினமாக அமைகிறது. 2005–ஆம் ஆண்டில் தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டமானது நலவாரியம் ஒன்றை அமைத்துருவாக்காமலேயே செயற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் உழவர் பாதுகாப்புத் திட்டமானது தற்காலச் சூழலுக்கு ஏற்றாற்போல் சீரமைக்கப்பட்டு விவசாயத் தொழிலாளர்கள், குறு மற்றும் சிறு விவசாயிகள் மற்றும் அவர்தம் குடும்பங்களுக்கு சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை வழங்குவதன் மூலம், அவர்தம் வாழ்வில் எதிர்கொள்ளும் இடர் வரவிலிருந்தும், நிச்சயமற்ற தன்மையில் இருந்தும் பாதுகாக்கும் பொருட்டு அவர்களுக்கு நிதி உதவிகள் வழங்கும் வகையில் நடைமுறைப்படுத்துவதெனக் கருதப்பட்டுள்ளது.

2. எனவே, அரசானது மேற்சொன்ன 29/2006 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தை நீக்கம் செய்வதென முடிவு செய்துள்ளது.

3. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**பி. தங்கமணி,**
*வருவாய்த் துறை அமைச்சர்.*

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.